ஆர்ஜித நடவடிக்கைகள் முடிவுற்றவுடன் பணிமனை நிறுவுவதற்கான கட்டுமானப் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்படும்.

திருமதி ஆர். சாவித்திரி அம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் உண்டு என்று சொல்லியிருக்கிறார்கள். மிகவும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, அந்தப் பணிமனையின் கட்டுமானப் பணி எப்போது தொடங்கப்படும் என்று அமைச்சரவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே அந்தக் கட்டுமானப் பணிகள் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது.

திருமதி ஆர். சாவித்திரி அம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணிமனையின் கட்டுமானப் பணிக்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீடுகள் தயாரித்துக் கொண்டிருக்கிறோம். மதிப்பீடுகளினுடைய குறிப்பு என்னிடத்தில் இல்லை. இந்த ஆண்டு அந்தப் பணிமனையைக் கட்டுவதற்கு அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 207, திரு. க. பழனிசாமி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

207—

எடப்பாடி தொகுதியில் கால்நடை மருந்தகம் அமைத்தல்

***34237**—திரு. க. பழனிசாமி :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், கச்சுப்பள்ளி ஊராட்சி, பள்ளிபட்டியில் புதிய கால்நடை மருந்தகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

1995 ஏப்ரல் 4]

திரு. க. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், கச்சுப்பள்ளி ஊராட்சி, பள்ளிப்பட்டி கிராமத்தைச் சுற்றிலும் 30 சிறிய கிராமங்கள் இருக்கின்றன. அதிலே 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்றன. குறிப்பாக அதிகமாக கறவை மாடுகள் இருக்கின்ற பகுதியாக இருக்கிற காரணத்தாலே, அந்தப் பகுதி மக்கள் எல்லாம் கால்நடைகளுக்கு நோய் ஏற்பட்டால், சுமார் 12 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கொங்கணாபுரம் கால்நடை மருந்தகத்திற்குத்தான் கொண்டு செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அமைச்சரவர்கள் மறுபரிசீலனை செய்து, பள்ளிபட்டியில் புதிய கால்நடை மருந்தகம் கட்டுவதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிப்பட்டி என்ற கிராமம் சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. கொங்கணாபுரம் ஒன்றியத்தில் ஒரு கால்நடை மருந்தகம் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. பள்ளிப்பட்டி கிராமத்தில் கோரப்படுவது இரண்டாவது மருந்தகமாகும். மேலும் இந்த ஒன்றியத்தில் புதுப்பாளையம் கிராமத்திலே ஒரு கால்நடை கிளை நிலையம் இருக்கிற காரணத்தால் புதிய கால்நடை மருந்தகம் அமைக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிப்பட்டு பகுதி மக்கள் நீண்டகாலமாகக் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். புதிய கால்நடை மருந்தகம் இல்லாவிட்டாலும் கூட அந்தப் பகுதி மக்களுடைய குறைகளைப் போக்குகின்ற வகையிலே துணை கால்நடை மருந்தகம் ஒன்றாவது கட்டுவதற்கு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்களை ஏற்று அதைத் தீர அலசி, ஆராய்ந்து, சாத்தியக்கூறுகள் இருக்குமேயானால் கிளை நிலையம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களை எவ்வளவுதான் கிளறிக் கிளறிக் கேட்டாலும்கூட இவ்வளவுதான் பதில் வரும். (சிரிப்பு)

வினா எண். 208, திரு. நா.சா. பழனிசாமி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.